**O.S. No. 92 /2021**

**Date: 10.06.2026**

**வா.சா.1 முருகன்**

**10-14 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது தந்தையார் பெயர் சுப்பிரமணியன் நாடார். அருணாச்சலம் என்ற சிவனைந்த பெருமாள் நாடார்க்கு பிராது தபசில் சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தாத்தாவுக்கு தபசில் சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள்ஏதும் பாத்தியப்பட்டதா என்றால் தபசில் சொத்துக்கள் மட்டுமே பாத்தியப்பட்டது. தாவா சொத்துக்கு கீழ் புறம் ரோடு உள்ளதா என்றால் ரோடு உள்ளது. சர்வே எண். 728/7 ல் உள்ள சொத்து யாருக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றால் எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்து. சர்வே எண். 728/7 ல் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் அதில் 14 செண்ட் எனது தந்தை சுப்பிரமணிய நாடாருக்கு பாத்தியப்பட்டது. சர்வே எண். 728/7 ல் மீதி உள்ள 14 செண்டு யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண். 728/7 ல் உள்ள சொத்து எனது தந்தைக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் எனது அப்பாவின் பூர்வீக சொத்து( தற்போது சாட்சி எனது தந்தையார் விலைக்கு வாங்கியது என்று சொல்கிறார். ) எனது தந்தை மேற்படி சொத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. சர்வே எண். 728/7 ல் உள்ள மீதி 14 செண்டு நிலம் எனது தந்தையுடன் பிறந்த பாலு என்ற பால்ச்சாமி நாடாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கிற்கு முன்னால் சங்கரன்கோவில் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 72/2010 என்ற வழக்கு என் மீது நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனது தரப்பிற்கு நான் தான் சாட்சி சொன்னேன் என்றால் சரிதான். மேற்படி எனது சாட்சியத்தில் சர்வே எண். 728/7 ஆனது எனது தந்தைக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளது உண்மையா என்றால் உண்மைதான். சர்வே எண். 728/7 ல் மீதி பாகம் எனது அப்பாவுடன் பிறந்தவரான பாலு என்ற பால்சாமி நாடாருக்கு

பாத்தியப்பட்டதாக சாட்சியம் சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தைப் பொருத்து வேலுச்சாமி என்பவர் முன்னால் என் மீது வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் சரிதான். அதற்கான ஆவணம் வா.சா.ஆ 1 என்றால் சரிதான். இவ்வழக்கின் வாதிகளான நாங்கள் மேற்படி வழக்கில் 1–3 பிரதிவாதிகளாக கட்சி செய்தோம் என்றால் சரிதான். வேலுச்சாமியின் பெயரில் நான் எதிர் கோரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். **அசல் வழக்கு எண். 72/2010 ல் தாக்கல் செய்த எதிர் கோரிக்கையின் நகல் வா.சா.ஆ.7** ஆகும். மேற்படி எதிர் கோரிக்கையில் நான் கேட்ட பரிகாரம் என்னவென்றால் ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கில் எதிர் கோரிக்கையில் கண்ட சொத்து எனக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகையும், மற்றும் நிரந்தர ஏவுக்கட்ளையும் கோரி தாக்கல் செய்து இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் எதிர் கோரிக்கையில் 4, 5 பிரதிவாதிகள் தரப்பினர்களாக காண்பிக்கப்படவில்லை என்றாலும், வாதி மீது மட்டுமே எதிர் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் எனக்கு அது பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எதிர் கோரிக்கையில் 1 ஏக்கர் 56 செண்டில் எனது தந்தையாருடன் பிறந்த பொன்னுச்சாமி நாடார் என்ற முத்துச்சாமி நாடார், பால்சாமி நாடார் என்ற லட்சுமண நாடார் மற்றும் எனது தந்தையான சுப்பிரமணிய நாடார் ஆகியோர்கள் வாய்மொழியாக பிரிவினை செய்துக்கொள்ளப்பட்டதாக கூறியுள்ளீர்கள் என்றால் நான் அவ்வாறு கூறவில்லை. மேற்படி வாய்மொழி பாகப் பிரிவினையில் 52 செண்டு எனது தந்தையான சுப்பிரமணிய நாடாருக்கு ஒதுக்கப்பட்டதாக முன் வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி எனது தந்தைக்கு கிடைத்த 52 செண்டு எங்கள் சகோதரர்களுக்குள் நடந்த வாய்மொழி பாகப் பிரிவினையில் எனக்கு விட்டுக்கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு விட்டுக் கொடுக்கப்பட்ட சொத்து தான். மேற்படி எனக்கு விட்டுக்கொடுக்கப்பட்ட 52 செண்டு நிலம் என்னுடைய தனித்த அனுபவத்தில் தான் உள்ளது. மேற்படி 52 செண்டைப் பொருத்து இவ்வழக்கின் 1, 2 வாதிகள் என்னுடைய பெயருக்கு ஏற்பாடு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள். அந்த ஆவணத்தினை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். **29.12.2009 ம் தேதிய ஏற்பாடு ஆவணம் வா.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வா.சா.ஆ.8 ஆவணம் எழுதிக்கொடுத்து நடைமுறைக்கு வந்ததா என்றால் நடைமுறைக்கு வந்துவிட்டது. வா.சா.ஆ. 8 ல் கண்ட சொத்தில் தற்போது யாருக்கும் பாத்தியம் உள்ளதா என்றால் யாருக்கும் பாத்தியம் கிடையாது அது என்னுடைய தனிப்பட்ட சொத்து. **வா.சா.ஆ. 8 ல்** கண்ட சொத்தில் 10 – 14 பிரதிவாதிகளுக்கு இன்றைய தேதியில் உரிமை உள்ளது என்று கட்சி செய்கிறீர்களா அல்லது எவ்வி உரிமையும் இல்லை என்று கட்சி செய்கிறீர்களா என்று கேட்டால் மேற்படி 52 செண்டு நிலத்தில் யாருக்கும் உரிமை இருப்பது கிடையாது. மேற்படி 52 செண்டு நிலத்தை நான் எப்படி அனுபவம் செய்து வருகிறேன் என்றால் அதில் எள்ளு, மற்றும் உளுந்து விதைத்து தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வருகிறேன். மேற்படி 52 செண்டு நிலத்தை எவ்வளவு காலமாக நான் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் 2009 ல் இருந்து நான் தனிப்பட்ட முறையில் தான் பார்த்து வருகிறேன். **வா.சா.ஆ. 8 ல் கண்ட 52 செண்டு** 2009 க்கு முன்னால் யாருடைய அனுபவத்தில் இருந்தது என்றால் எனது தந்தை தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வந்தார். எனது தந்தை அனுபவம் செய்து வந்த 52 செண்டில் இந்த 10–14 பிரதிவாதிகளுக்கு அப்போதும் எந்த உரிமையும் இருந்திருப்பது கிடையாது. 10–14 பிரதிவாதிகளின் தந்தை முத்துச்சாமி நாடாருக்கு 50 செண்டு நிலம் தனித்து விடப்பட்டதாக நான் எனது எதிர் கோரிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. தங்கச்சாமி நாடாரின் வாரிசுகள் 18 – 25 வரையிலான பிரதிவாதிகளை எதற்காக கட்சி சேர்த்துள்ளேன் என்றால் தெரியாது. இந்த வழக்கில் 29.01.1970 ல் தங்கச்சாமி நாடாருக்கு முத்துச்சாமி நாடார் கிரையம் கொடுத்ததாக சொல்லியுள்ளது உண்மையா என்றால் ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் தங்கச்சாமி நாடாரின் வாரிசுகளுக்கு எதிராக நான் சாட்சி சொல்கிறேன் என்றால் எனக்கு தெரியாது. தங்கச்சாமி நாடார் இறந்து எவ்வளவு காலம் இருக்கும் என்றால் ஞாபகம்

இல்லை. 02.02.1983 ல் பாக பத்திரம் மூலமாக தங்கச்சாமி நாடார் தனது வாரிசுகளுக் 55 செண்டு நிலத்தை பிரித்துக்கொடுத்துவிட்டார் என்று வா.சாஆ.7 எதிர் கோரிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. தங்கச்சாமி நாடார் வகையறாக்கள் கிரையம் பெற்ற சொத்தில் வடகடைசி 2 செண்டு நிலம் செல்லையா நாடார் மகன் செல்வராஜ் என்பவருக்கு கிரையம் கொடுக்கப்பட்டு அவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று நான் கூறியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.8 ல் நான் எழுதிய வாசகங்கள் உண்மையானதா என்றால் உண்மையானது. வா.சா.ஆ.8 ல் சிவனைந்த பெருமாளுக்கு பாகமான சொத்து அவருடைய மக்களுக்கு இடையே பிரிக்கப்பட்டதில் எனது தந்தைக்கு கிடைக்கப்பட்டது என்று கூறியுள்ளது உண்மையா என்றால் உண்மையானது. வா.சா.ஆ.8 ல் சொல்லப்பட்டுள்ள பாகப் பிரிவினை எந்த காலம் நடைபெற்றது என்றால் இன்றைய தேதியில் இருந்து 20 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது, அப்போது எனக்கு 40 வயது இருக்கும் எனக்கு அப்போது விவரங்கள் தெரியும். வா.சா.ஆ.8 ல் உள்ள வாசகங்களுக்கு விவரம் சொன்னது யார் என்றால் எனது உடன் பிறந்த அண்ணன் சொன்னார். வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 ல் ஆவணத்திலும் சொத்தானது பிரிக்கப்பட்டு அனுபவம் செய்து வருகிறோம் என்று கூறியபின்னரும் நான் தற்போது கேட்கக்கூடிய பாகப் பிரிவினை ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ளள வா.சா.ஆ.7 எதிர் கோரிக்கையில் உள்ள பரிகாரம் அவ்வழக்கில் கண்ட 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக கேட்கப்பட்டுள்ளதால் அது சட்டப்படி ஏற்புடையதல்ல என்று தான் வா.சா.ஆ.1 தீர்ப்புரையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த வழக்கு தாக்கல் செய்த கால கட்டத்திலேயே 1974 ம் தேதிய தங்கச்சாமி நாடாரின் பத்திரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. அசல்வழக்கு எண். 72/2010 வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எதிர் கோரிக்கையில் முத்துச்சாமி நாடார் கிரையம் கொடுத்த 50 செண்டு நிலம் 1983 ல் பாகப் பிரிவினை செய்யப்பட்டு , பாகப் பிரிவினை செய்யப்பட்ட காலமுதல் அவர்கள் அனுபவத்தில் உள்ளது என்று குறிப்பிட்டு கூறியுள்ளேன்

என்றால் சரியல்ல. 1983ம் ஆண்டில் இருந்து 35 ஆண்டுகளுக்கு மேலாக எனக்கு தெரிந்தே தங்கச்சாமி நாடாரின் வாரிசுகள் அனுபவத்தில் உள்ள நிலையில் நான் கேட்கக்கூடிய பாகப் பிரிவினை விளம்புகை பரிகாரம் எனக்கு சட்டப்படி கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 தீர்ப்புரையில் பாகப் பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யும் பட்சத்தில் தான் உபயவாதிகளின் உரிமை குறித்து தீர்மானிக்க இயலும் என்று தெளிவுப்பட கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 தீர்ப்புக்கு மேலாக நான் எந்த மேல் முறையீடும் செய்துகொள்ளவில்லை. சர்வே எண். 728/7 நிலம் சுப்பிரமணிய நாடாருக்கும், பாலுச்சாமி என்ற லட்சுமண நாடாருக்கும் மட்டுமே பாகமாக விடப்பட்டுள்ளது நிரூபணமாகியுள்ளது என்று தீர்ப்புரையில் கூறப்பட்டுடள்ளது என்றால் சரியல்ல. எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட நிலத்தினை பொருத்து இவ்வழக்கில் எவ்விதமான கட்சியும் செய்யாமல் 10–14 பிரதிவாதிகள் தகப்பனாரான முத்துச்சாமி நாடாருக்கு விடப்பட்ட சொத்தைப் பொருத்து பாகப் பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு மன்றத்தில் நிலைத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 72/2010ன் வாதியான வேலுச்சாமியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளோனா என்றால் சேர்க்கவில்லை. வா.சா.ஆ.1 தீர்ப்புரையில் தபசில் சொத்தின் உபயவாதிகளின் உரிமையை பொருத்து பாகப் பிரிவினை வழக்கு தாக்கல் செய்தால் மட்டுமே தீர்மானிக்க முடியும் என்று கருத்துரை கூறப்பட்டுள்ளபோது அந்த வழக்கின் வாதியினை சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கானது உரிய தரப்பினரை சேர்க்காத காரணத்திற்கு உள்ளாகியுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.726/6ல் இருந்து வரும் 1 ஏக்கர் 56 செண்டு நிலத்தில் வடபக்கம் உள்ள 50 செண்டு நிலம் தங்கச்சாமி நாடாருக்கு 19.01.1970ம் தேதிய பதிவுக் கிரைய ஆவணம் மூலமாக பாத்தியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தென்பக்கம் உள்ள 19 செண்டு நிலம் மாடசாமி நாடாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணம் மாடசாமி நாடார்

புஞ்சைக்கு கிழக்க என்று போடப்பட்டுள்ள இந்த மாடசாமிக்கு இந்த சர்வே எண்ணில் இடம் உள்ளதா என்றால் இல்லை. மாடசாமி தான் அனுபவம் செய்து வந்த பின்னர் அவரது மகனான மகாராஜ என்பவர் 05.7.2010 ல் சீமோன் என்பவருக்கு கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் பின்னர் முருகேசன் என்பவருக்கு கிரையம் கொடுக்கப்பட்டு தற்போது பசுபதி என்பவர் அனுபம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்கண்ட நபர்களை கட்சி சேர்க்காததால் இந்த வழக்கு அவசிய கட்சியை சேர்க்காத குறைபாட்டிற்குள்ளாகியுள்ளது என்றால் சரியல்ல. எனது தாத்தா சிவனைந்த பெருமாள் உடன் பிறந்தவர் வடிவம்மாள் என்றால் சரிதான். மேற்கண்ட கிரையங்களுக்கு பின்பு சிவனைந்த பெருமாள் பெயரில் 87 செண்டு நிலம் மட்டுமே இருந்து வந்தது என்றால் சரியல்ல. 738/7 எனது தகப்பனாருக்கும், பால்சாமிக்கும் ஒதுக்கப்பட்டது போக குடும்பத்திற்கு இருந்து வந்த 726/6 ல் மத்தியில் உள்ள 87 செண்டு நிலம் பொன்னுச்சாமி என்ற முத்துச்சாமிக்கு என்பவரின் தனித்த பாகத்திற்கு விடப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. சிவனைந்த பெருமாள் என்பவருடன் பிறந்த வடிவம்மாளை பொன்னுச்சாமி என்ற முத்துச்சாமி என்பவர் பாதுகாத்து வந்து அந்திமகால செலவுகள் அனைத்தும் ஏற்றுக்கொண்டு செய்யவேண்டும் என்றுகுடும்ப ஏற்பாட்டில் பேசி முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன்படி வடிவம்மாள் என்பவரின் அனைத்து செலவுகளையும் பொன்னுச்சாமி என்ற முத்துச்சாமி என்பவர் செய்து வந்து அவரை நல்லடக்கம் செய்தார் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தில் பால்சாமி நாடார் என்ற, அவரின் வாரிசான 17 ம் பிரதிவாதிக்கோ பங்கு பாகம் கிடையாது என்றால் பங்கு உண்டு. 17 ம் பிரதிவாதிக்கு நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 8 ல் கண்ட 52 செண்டு நிலத்தில் ஏதேனும் பங்கு உண்டா என்றால் கிடையாது. 1 ஏக்கர் 56 செண்டு நிலத்தில் தான் வா.சா.ஆ. 8 ல் கண்ட 52 செண்டு உள்ளது என்றால் சரிதான். பிராது தபசில் சொத்தில் 1 ஏக்கர் 56 செண்டு நிலத்தில் எனது பாகத்திற்கு வா.சா.ஆ.8 ல் ஏற்பாடு ஆவணத்தில் கண்ட நிலத்தைக்குறித்து பாகப் பிரிவினை உரிமை கோருகிறேனா அல்லது 1

ஏக்கர் 56 செண்டு நிலத்தில் உள்ள வேறு இடத்தில் உள்ள சொத்தைப் பொருத்து பாகப் பிரிவினை கோருகிறேனா என்றால் வா.சா.ஆ– 8 ல் கண்ட 52 செண்டு நிலம் தான் எனக்கு வேண்டும். 726/6 ல் கண்டுள்ள 87 செண்டு நிலம் பொன்னுச்சாமி என்ற முத்துச்சாமியின் வாரிசுகளுக்குகிடைக்கபெற்று அவர்கள்குடும்பத்திற்குள் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினைப் படி அவரது 3 வாரிசுகளும் தல 29 செண்டாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. பவுன் ராஜ்க்கு கிடைத்த 29 செண்டு நிலத்தை 21.02.2019 ம் தேதிய பதிவு ஏற்பாடு ஆவணம் மூலமாக அவரின் மகனான மாதவன் என்பவருக்கு கொடுத்து அனுபவத்தையும் அவரிடம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்கண்ட 29 செண்டு நிலத்தினைப்பொருத்து புஎண். 726/6 சி 3 என தனியாக உட்பிரிவு செய்யப்பட்டு தனிப்பட்டாவும் மேற்படி மாதவன் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி மாதவன் மாடத்தி என்பவருக்கு 15.12.2020 ம்தேதிய கிரையம் மூலம் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு மேற்படி மாடத்தியும் ராஜாமணி என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டு தற்போது ராஜாமணி என்பவரின் பெயரில் புஎண். 726/6 சி 3 நிலம் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பால்ச்சாமி என்பவருக்கு கிடைத்த சொத்தை அவரது மனைவியான வள்ளியம்மாள் 05.02.2013 ம் தேதிய செட்டில்மெண்டு ஆவணம் மூலமாக அவரது மகனான நந்தீஸ்வரன் என்பவருக்கு 726/6 சி 2 நிலத்தினை கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அவர் பெயரில் 7466 என்ற பட்டா ஏற்பட்டு விட்டது என்றால் சரியல்ல. மேற்படி நந்தீஸ்வரன் என்பவரும் 26.11.2020 ம் தேதிய கிரையப்படி பரமசிவன் என்பவருக்கு கிரையம் கொடுத்து மேற்படி 29 செண்டு நிலத்தினை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 87 செண்டில் வடகடைசியான பாகமான 29 செண்டு நிலத்தினை 11 ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 11 ம் பிரதிவாதி 25.01.2018 ம் தேதிய செட்டில்மெண்டு மூலம் 10 ம் பிரதிவாதியிடம் இருந்து பெற்று அனுபம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

மேற்கண்ட 87 செண்டு நிலத்தினை பொருத்து அதில் பதிவு ஆவணம் மூலமாக உரிமம் பெற்ற நபர்களும் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் . அவர்களை கட்சி சேர்க்காததால் இவ்வழக்கு அவசிய கட்சினரை சேர்க்காத குறைபாட்டிற்கு உள்ளாகியுள்ளது என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட ஏற்பாட்டிற்கு மாறுபட்டும் பல்வேறு பதிவு ஆவணங்களுக்கு மாறுபட்டும் நான் தாக்கல் செய்துள்ள இந்த பாகப்பிரிவினை வழக்கானது இம்மன்றத்தில் நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா..ஆ–7 எதிர் கோரிக்கை மனுவில் இவ்வழக்கின் 10–14 பிரதிவாதிகள் தரப்பினர்களாக இருந்திருப்பது இல்லை என்றால் சரியல்ல. 72/2010 ல் வழக்கில் 4,5 பிரதிவாதிகளுக்கு எதிராக எனது எதிர் கோரிக்கை செல்லக்கூடியதில்லை என்று வா.சா.,ஆ. 1ல் கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே, இவ்வழக்கில் கண்ட பிரதிவாதிகள் யாரும் முன் வழக்கின் எதிர் கோரிக்கையில் தரப்பினர்களாக இல்லாததால் வா.சா.ஆ. 1ல் கூறப்பட்டுள்ள கருத்துரையானது இவ்வழக்கின் பிரதிவாதிகளை எவ்விதத்திலும் பாதிக்கக்க்கூடியதல்ல என்றால் சரியல்ல. உண்மை நிலைக்கு மாறுபட்டு வா.சா.ஆ., 1 கருத்துரையின் அடிப்படைடயில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு இம்மன்றத்தில் நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு 10–14 பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுப்படி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.